# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.161/2019பே.1**
**ஆணை நாள்: 20 -01-2020.**

| | | |
|---|---|---|
| **மக்கள் செய்தி மையம் இதழ் பத்திரிக்கை செய்தி** | -- | இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்தது |
| **செயல் அலுவலர் திருப்போரூர் பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்.** | -- | **எதிர் மனுதாரர்.** |

ஆணை.

" மக்கள் செய்தி மையம் செயப்திகள் " பத்திரிக்கைச் செய்தியில், செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் மண்டலம், திருப்போரூர் பேரூராட்சியில் " மூக்குத்தியம்மன் குளம் எங்கே " எனத் தலைப்பிட்டு வெளிவந்த செய்தியில், மேற்படி திருப்போரூர் பேரூராட்சிக்கு சொந்தமான மூக்குத்தியம்மன் குளம் 20.02.2014ல் ரூ.20.00 லட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டு, அப்போதைய அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டதாகவும், ஆனால் தற்போது மேற்படி குளம் காணப்படவில்லை எனவும், மேற்படி குளத்தின் பராமரிப்பிற்காக பேரூராட்சி நிதியில் இருந்து பராமரிப்பு செலவு என்ற தலைப்பில் ஆண்டுக்கு ரூ.3.00 லட்சம் முதல் ரூ.5.00 லட்சம் வரை செலவினம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செய்தியினை இம்முறைமன்ற நடுவம் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2(3)ன் கீழ் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்து, முறையீட்டு மனு எண்.161/2019 என எண்ணிடப்பட்டது. இம்முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

இம்முறைமன்ற நடுவ 26.11.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி, இம்முறைமன்ற நடுவத்தில் 13.01.2020 அன்று ஆஜரான திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர், மேற்படி புகார் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள 09.01.2020 நாளிட்ட விளக்க அறிக்கையில், செங்கல்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் மண்டலம், திருப்போரூர் பேரூராட்சிக்குட்பட்ட மூக்குத்தியம்மன் குளத்தினை 2012–13ஆம் நிதியாண்டு, நபார்டு திட்டத்தின் கீழ் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பேரூராட்சி மன்ற தீர்மான எண். 14/21.02.2012 ன்படி ரூ.20.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை எண்.218/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.08.2012ன்படி ஆணையிடப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து மேற்படி பணிக்கான தொழில் நுட்ப அனுமதி எண்.698/12.13, நாள்.12.09.2012ல் பெறப்பட்டு, 28.09.2012ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை

பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.152/29.08.2012ன் மூலம் அங்கீகரிக்கப்பட்டு, 04.10.2012 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி நடைபெறும் போது உதவிப் பொறியாளர், பணி ஆய்வாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் மேற்பார்வையிட்டு, பணிகள் முடிக்கப்பட்டமைக்கான அளவீடுகள் உரிய பதிவேடுகளில் பதிந்து, காஞ்சிபுரம் மண்டல உதவி செயற்பொறியாளரால் மேலொப்பம் பெறப்பட்டு, உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை பேரூராட்சி மன்ற தீர்மான எண். 165ன்படி வழங்கப்பட்டதாகவும், மேற்படி குளம் பணிக்கு 2015—ஆம் ஆண்டில் இருந்து பராமரிப்பு செலவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், சிறு அளவிலான பராமரிப்பு பணிகள் பேரூராட்சி பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுள்ளதாகவும், பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பராமரிப்பு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும், மேற்படி குளத்தின் தற்போதைய நிலை குறித்தான புகைப்பட நகலுடன் இணைத்து தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளதுடன், 13.01.2020 நாளிட்ட தனது வாக்குமூலத்திலும் மேற்படி செய்தியினை உறுதி செய்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்நேர்வில் புகார் மனு தொடர்பான செய்தி, திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டன. திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்படி குளம் மேம்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதற்கான செலவினங்கள் ஏதும் 2015—ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்படவில்லை என உறுதி செய்துள்ளதுடன், குளம் தொடர்பான தற்போதைய நிலை குறித்த புகைப்படங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிட முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

—//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//—

உதவிப் பதிவாளர்.

பெறுநர்

1.செயல் அலுவலர்
திருப்போரூர் பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.

நகல்
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.